




கழகத்தின் வாழும் வரலாறுகளாய் திகழும் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கவுரவிப்பதை செல்லும் மாவட்டங்களில் எல்லாம் வழக்கமாக தான் கொண்டுள்ள அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதன் தொடர்ச்சியாக, நேற்று விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் 2 ஆயிரம் மூத்த கழக முன்னோடிகளுக்கு தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழியை வழங்கினார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தனுஷ்குமார் எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், செ.தங்கப்பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.






தி.மு.கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டை முன்னிட்டு, விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர்களும், அமைச்சர்களுமான கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், செ.தங்கப்பாண்டியன், மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் உள்ளனர்.